காம்கேர் கே. புவனேஸ்வரி



# அர்த்தமுள்ள அரும்பின் கனவு

பன்னிரெண்டு வயதான கண்ணனுக்கு சின்ன வயதில் இருந்தே இரக்க குணம். கோயிலுக்குச் சென்றால் வாசலில் பிச்சை எடுப்பவர்களுக்குக் காசு போடணும் என்பான். பிரயாணம் செய்யும் போது எதிர்ப்படும் வயதான பிச்சைக்காரர்களைப் பார்த்தால் பரிதாபப்பட்டு அவர்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள் என்று கேள்விகளால் துளைத்தெடுப்பான்.

மகனுக்குப் புரிய வைக்க அவனுடன் பேச ஆரம்பித்தார் அம்மா. ''கண்ணா, உன் கிட்ட நிறைய பணம் இருந்தாத்தான் ஆதரவற்றோர் இல்லம் ஆரம்பிக்க முடியும்''

''நிறைய பணம் எப்படிம்மா சம்பாதிக்க முடியும்?''

''கண்ணா, சேவை செய்யணும்னா முதல்ல நன்றாகப் படிக்கணும் நல்ல மதிப்பெண் வாங்கணும், படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்கணும் அப்பத்தான் நிறைய சம்பாதிக்க முடியும்அதில் வருகின்ற காசை வைத்து தர்மம் செய்யணும்''

''நிறைய படிக்கணும்னா என்ன படிக்கணும்மா?''

''டாக்டருக்குப் படிச்சா டாக்டராகி நிறைய சம்பாதிக்கலாம், இன்ஜினியருக்குப் படிச்சா இன்ஜினிய ராகி சம்பாதிக்கலாம், பிசினஸ் மேனேஜ்மெண்ட் படிச்சா சொந்தமா பிசினஸ் செய்து நிறைய பணம் சம்பாதிக் கலாம், உனக்கு எதில் விருப்பம் இருக்கோ அந்தத் துறையைத் தேர்ந்தெடுத்துப் படிக்கலாம்''

''அப்படின்னா பிசினஸ் செய்தால் ஆதரவற்றோருக்கு உதவ முடியுமாம்மா?''

''கண்ணா, பிசினஸ் செய்தால் பணம் சம்பாதிக் கலாம். அந்தப் பணத்தை வைத்து நீ வீடு வாங்கலாம், கார் வாங்கலாம், சொந்தமா தியேட்டர் கூட வீட்டிலேயே அமைத்துக் கொள்ளலாம். அதுக்கே அந்தப் பணம் சரியா இருக்கும்.''

''அப்புறம் எப்படிம்மா ஆதரவற்றோர் இல்லம் ஆரம்பிக்க முடியும்?''

''பிசினஸ் செய்வதால் கிடைக்கின்ற பணத்தை வைத்து நீ செய்கின்ற பிசினஸுடன் தொடர்புடைய வெவ்வேறு பிசினஸை செய்யலாம். பிசினஸில் கிடைக் கின்ற பணத்தை பிசினஸிலேயே இன்வெஸ்ட் செய்தால் நிறைய பணம் சம்பாதிக்கலாம். நீ நினைச்ச மாதிரி ஆதரவற்றோருக்கு உதவலாம்''

''அப்படியாம்மா? ஹை! ஜாலி! நிறைய பணம் சம்பாதிப்பதுதான் இனிமேல் என் லட்சியம்''

'கண்ணனின் சந்தோஷத்தில் மகிழ்ந்தபடி, உயரிய குறிக்கோளை உடைய மகனுக்கு, அதை பூரணமாக அடையும் வழியை சரியாக சொல்லிக் கொடுத்துப் புரிய வைத்துள்ளோம்' என்ற நிம்மதியுடன் எழுந்தாள்.

வானமளவு நேர்மையான கொள்கை இருந்தால் எத்தனைக்கு வேண்டுமானாலும் ஆசைப்படலாம்தானே?

### பெற்ற குழந்தைகள் வெளியிட, பேரக் குழந்தைகள் பெற்றுக் கொள்ள

## வித்தியாசமான ஒரு புத்தக வெளியீடு

ஜுலை மாதத்தின் முதல் நாள், நங்கைநல்லூர் கணேஷ் மண்டலியில் ஒரு பீமரத சாந்தி. பிள்ளைகள் மூவரும் இணைந்து தங்கள் அப்பா, அம்மா தங்களை வளர்த்த விதத்தை ''அன்புள்ள அப்பா, அம்மாவுக்கு'' என்ற புத்தகமாகத் தயாரித்து வெளியிட் டார்கள். அது பெற்ற குழந்தைகள் வெளியிட பேரக் குழந்தைகள் பெற்றுக் கொள்ள வித்தியாசமான புதுமையான புத்தக வெளியீடாக அமைந்தது. மேலும் அவர்கள் அப்பா, அம்மா அவர்களை வளர்த்த விதத்தை ஒன்றரை மணி நேரம் ஓடக்கூடிய ''அன்புள்ள அப்பா, அம்மாவுக்கு''என்ற ஆவணப் படமாகத் தயாரித்து வெளி யிட்டார்கள்.



தவிர, ஒவ்வொரு வீட்டிலும் இதுபோல ஒரு ''குடும்பப் புத்தகம்'' (Family Book) இருக்க வேண்டும் என்பதையும் அந் நிகழ்ச்சியின் மூலம் இன்றைய இளம் தலைமுறையினர் தெரிந்து கொண்டார்கள். மாற்றத்தை உண்டாக்க நாம்தான் முதலில் முயல வேண்டும் என்பதற்கு பெற்றோர்களுக்காக இப்புத்தகத்தை எழுதி, வெளியிட்டவர்? காம்கேர் புவனேஸ்வரி!